Providing seeds for home gardening at Neervely North on December 10, by Rtr.T. Geethalatha.

## 82. SALES OF MAGAZINE

வேடிக்கை சஞ்சிகையானது கழக உறுப்பினர்களால் மாதந்தோறும் விற்பனை செய்யப்படுகின்றது.

Sales of Vedikkai magazine on Dec. 16. by Rtr. R. Vijitha.

## 83 AWARENESS PROGRAMME

டெங்குக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வை எற்படுத்தும் துண்டுப் பிரசுரங்கள் கழக உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் வழங்கப்பட்டது.

Dengue fever awareness Programme in collaboration with Rotary club of Jaffna on December 23, by Rtr.Sailajan


## 84. GREETING CARDS SENDING




சகோதரக்கழகங்கள், தாய்க்கழக உறுப்பினர் களுக்கு புதுவருட வாழ்த்து மடல்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

New Year Cards to Members on Dec., by Rtr. S. Rishange

85. **CHRISTMAS CELEBRATION**



கொழும்புத்துறை St. Joseph முதியோர் இல்லத்தில் நத்தார் தின நிகழ்வு கொண்டாட்டம், முதியோர்களுக்கான பரிசில் பொருட்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

Christmas Celebration At Joseph Elder's Home on December 25, 2007 at 9.00 am. by Rtr.T.M.Priyatharshini

86. **CAREER GUIDANCE SEMINAR**



சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு தொழிற்கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெற்றது.

Career guidance seminar in collaboration with rotary club of jaffna On December 26, by Rtr.Thushyanthan

87. **YEAR END PARTY**




வருட இறுதி ஒன்றுகூடல் நிகழ்வு றோட்டறி நிலையத்தில் இடம்பெற்றது.

Year End Party on December 30, by Rtr.P.Sathees

88. **SENDING DV 2009**

அமெரிக்கா DV 2009 விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு, பின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மீள பெறப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது

Sending DV 2009 American lottery visa form from October 01, - December 01. by Rtr.Sailajan

89. **SLIDE SHOW**

எயிட்ஸ் நோய் விழிப்புணர்வு தொடர்பான Slide show ராஜாத் திரையரங்கில் இடம் பெறுகின்றது.

slide show on Aids awareness at Nagams, Rajah and Manokara Theatre from December 01 Rtr.R.Mahinan




90. **CHLORINATION**

கொக்குவில் பிரதேச கிணறுகளுக்கு சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் குளோரின் இடப்பட்டது.

Chlorination of Drinking water wells at Kokuvil on Jan. 04 by Rtr. Thusyanthan.




91. **REMOVING HARMFUL PLANT**

சகோதரக் கழகங்களுடன் இணைந்து பாதீனிய ஒழிப்புச் செயற்திட்டமானது நீர்வேலி பகுதியில் இடம்பெற்றது.


Removing Harmful Plants In Collaboration with Other Clubs And Parent Club on January 05, by Rtr. Mahinan



92. **4WAY TEST**

வெளிநாட்டு, றோட்டறி, கழகங்களுக்கு 4way test அனுப்பப்பட்டது.

Sending 4 way test pamphlets on January 09, by Rtr.Mahinan



93. **THAIPONGAL DAY CELEBRATION**

பொங்கல் நிகழ்வு றோட்டறி நிலையத்தில் இடம் பெற்றதுடன் அனைத்துத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது.

Thaipongal Celebration and Cultural Contact on Jan 15 by Rtr. Vaheesan. Rtr. Sureka.







94. **ENTERTAINMENT PROGRAM**

எமது கழக அங்குரார்ப்பண தினத்தை முன்னிட்டு சிவபூமி மாணவர்களுடன் விருந்துபசார நிகழ்வும், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றது.

Chartered day Celebration at Sivapoomi Children home on Jan. 16, by Rtr. Priyatharshini





95 CHARTED DAY CELEBRATION

எமது கழகத்தின் 16வது அங்குரார்ப்பண நிகழ் றோட்டறி நிலையத்தில் இடம் பெற்றது.

Charted day party at our Club on Jan. 16 by Rtr. A. Karthika.



96. **SHARMATHANA**

*மாற்று வலுவுடையோர் சங்க காரியாலய சுற்றாடலில் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.*

Shramathana at Arod Association for on Jan. 7. by Rtr. R. Vijitha.



97. **EXHIBITION**

*"விழிகளின் வழியே" புகைப்படக் கண்காட்சி பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.*

Art Exhibition on Jan 19,20,21 by Rtr. Y. Binthuja



98. **DANCE WORKSHOP**

*செல்வி பிரசாந்தி யோகராஜாவினால் நடாத்தப்பட்ட நடனப்பயிற்சிப் பட்டறை பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் 3 நாட்கள் நடைபெற்றதுடன் அதில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.*

Dance workshop for Jaffna District Artists on Jan 19-22 by Rtr. T. Vathsala









## 99. PROVIDING WIRE MESH




பாசையூர் முன்பள்ளிக்கு கம்பி வலைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

Providing wire mash to Pre-School in Pasayoor on Jaffna 22 by Rtr. T. Vathsala

## 100. SHOES DONATION




பெரிய புலம் மகாவித்தியாலய வறிய மாணவர்களுக்கு பாதணி வழங்கப்பட்டது.

Shoes Donation To Periyapulam School Children on January 23, by Rtr.Myvili.

## 101. CLOTHINGS DONATION





பொம்மை வெளிப் பிரதேச வறிய குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆடைகள் வழங்கப்பட்டது.

Donation of Clothing to poor Children at pommaiveli on jan 29 by Rtr. Myvili

## 102. GENERAL KNOWLEDGE EXAM

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே பொது அறிவு நுண் அறிவு தேடல் பரீட்சை நடாத்தப்பட்டு முதல் இடம்பெற்ற மாணவனுக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

General Knowledge and Aptitude exam for Jaffna district School Children on Sep- Feb by Rtr. S. Kasthuri






103. **ASSISTING TO INTERACT CLUBS FOR FUND RAISING**

பொது அறிவப் பரீட்சை வினாத்தாள்களை இடைவளைக் கழகங்களின் ஊடாக விற்பனை செய்ததன் மூலம் 17500/= நிதி இடைவளக் கழகங்களைச் சென்றடைந்தது.


Assisting to interact Clubs in Jaffna District for fund raising on feb 01 by Rtr. S. Kasthuri



104. **SHRAMATHANA**

மாற்று வலு உடையோர் சங்க விடுதியில் சிரமதானப் பணி இடம்பெற்றது.

Sharamathana at Arod on Feb. 02 by Rtr. R. Vijitha.



105. **ENTERTAINMENT PROGRAM**

கழகங்களுக்கிடையே முத்துத்தம்பி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடாத்தப் பட்ட விளையாட்டப்போடடி நிகழ்வு களில் எமது கழக அங்கத்தவர் களும் கலந்து மகிழ்ந்தனர்.

Taking Part In An Entertainment Program of Rotaract Club Of Jaffna on February 02, by Rtr.A.Karthiga.



106. **DONATION**

ஞானோதயா வித்தியாலய பாடசாலை மாணவர் களுக்கு சாப்பாட்டு பெட்டிகள் வழங்கப்பட்டது.

Donation of tiffin box to Children at Gnonothaya Vidyalaya on feb 07, by Rtr. R. Mahinan



107. **ASSISTING SPORTS MEET**

கல்வியங்காட்டு ஞானோதயா வித்தியாலய விளையாட்டுப் போட்டிகளில் எமது கழக உறுப்பினர்கள் நடுவர்களாகக் கலந்து பணியாற்றினார்கள்

Assisting for Gnanothaya Vidyalaya Sports meet on feb9 by Rtr. R. Mahinan

108. **Taking Part in DCM on Feb-09 by Rtr. S. Lingesan**

109. **DANCE WORKSHOP**

யாழ் மாவட்ட மாணவர்களுக்கு நடனப் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது

Dance workshop for Jaffna district Artists on feb. 16. by Rtr. Y. Binthuja



110. **PROVIDING CHICKENS**

அளவெட்டி பிரதேச வறிய குடும்பங்களில் பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் நோக்குடன் சுய தொழில் முயற்சியை ஊக்கு விக்கும் முகமாக கோழிக்குஞ்சுகள் இலவச மாக வழங்கப்பட்டது

Providing Chickens for below Poverty line families on february 16, by Rtr. R.Mahinan




111. **CULTURAL COMPETITION**

யாழ் நகர்ப்பகுதி மாணவர்களுக்கிடையே சமய, கலாச்சாரப் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டது.

Religious and cultural competition on feb.16 by Rtr. S, Myvili










## 112. QUIZ COMPETITION

கழகங்களுக்கிடையே வினாடி வினாப் போட்டி நடாத்தப்பட்டது

Quiz Competition for Rotaract clubs in Jaffna District on Feb. 17,24 by Rtr. T. Geethalatha






## 113. IT CLASSES

சென். பெனடிக்ட் வித்தியாலய மாணவர்களுக்கு 4 மாதகால கணனி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது

It Classes for Grade five Children at St. Penedicts Vidyalaya on Sep. 15- Feb-16 by Rtr. Senthan





**114. TAKING PART IN DISTRICT CONFERENCE**



Where our Club presentation was taken place on March 01 & 02 by Rtr. S. Lingesan

றோட்டறக் மாநாட்டில் பங்கு பற்றியதுடன் எமது கழக செயற்திட்ட ஆற்றுகையும் காண்பிக்கப் பட்டது.

115. **DISTRIBUTION OF BED SHEETS**



சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு இலவசமாக ஒரு தொகுதி படுக்கை விரிப்புக்கள் வழங்கப்பட்டது.

Distribution of Bed sheets to chavakachcheri Government Hospital on March 05, by Rtr. PP.T. Kabilan

116. **DONATION TILL BOX**



சிறார்களிடையே சேமிப்புப்பழக்கத்தை ஊக்கு விக்கும் முகமாக சாவகச்சேரி முன்பள்ளிகளுக்கு உண்டியல்கள் வழங்கப் பட்டது.

Providing Till box to Vinoba Pre-School Children at Chavakachchery on March 05, by Rtr. R. Mahinan

117. **TRIP**

எமது கழக அங்கத்தவர்கள் வடமராட்சியில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு சுற்றுலா மேற்கொண்டதுடன் கழக உறுப்பினரின் வீட்டிற்கும் சென்று மகிழ்ந்தனர்.

Trip to Vadamarachchi Chelvachannathi and Vallipuram Temple on March 06, by Rtr. Y. Binthuya













118 **JOINT MEETING**

World Rotaract week ஐ முன்னிட்டு தாய்க் கழகத்துடன் இணைந்த கூட்டம் றோட்டறி நிலையத்தில் இடம்பெற்றது.

Joint meeting with Rotary Club of Jaffna at Roatary Centre on March 09. by Rtr. Y. Binthuya




## 119 SAVINGS ACCOUNT OPENING




தந்தையை இழந்த வறிய மாணவர்களுக்கு வங்கிக் கணக்கு ஆரம்பித்து கொடுக்கப்பட்டது.

Opening Bank Account for children who lost their father on March 12. by Rtr. PP. T. Kabilan


## 120 PROVIDING CEMENT



வினோபா முன்பள்ளியின் கட்டட மீள் சீரமைப்புக்காக சீமெந்து இலவசமாக வழங்கப்பட்டது.

Providing Cement for Renovation of Vinoba Pre-School in Kachchai on March 12. by Rtr. PP.T. Kabilan

## 121. SEMINAR



Rtr. S. Sivaruban அவர்களினால் நிதி முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு Rotary Centerல் நடைபெற்றது.

Financial Management Seminar for members on March 16, by Rtr. R. Mahinan

## 122 BLOOD DONATION



யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது

Blood Donation at Jaffna Teaching Hospital in March 30, by Rtr. S. Sureka

## *123.* SPORTS MEET

றோட்டறிக்கழகத்துடன் இணைந்து உரும்பிராயை சேர்ந்த 4 முன்பள்ளிகளுக்கிடையில் விளையாட்டு விழா நடாத்தபபட்டது

Sports meet among four preschools in collaboration with Rotary Club at Urumbirai on April - 6, by Rtr. R. Mahinan





## *124.* LUNCH FOR POOR CHILDREN

அரியாலையை சேர்ந்த 130 வறிய சிறுவர்களுக்கு மதிய போசனம் சமைத்துக் கொடுக்கப்பட்டது.

Lunch for 130 poor children at Ariyalai on April - 6, by Rtr. Priyatharshni



## *125.* PRESENTATION

திருகோணமலை றோட்டறிக்கழகத்தை றோட்டறக்ட் கழகம் ஒன்றை அனுசரணை செய்யமாறு ஆற்றுகை ஒன்று அனுப்பப்பட்டது.அதன் பிரதி சர்வதேச றோட்டறிக்கும் அனுப்பப்பட்டது.

Presentation to Rotary Club of Trincomalee on Sponsoring a Rotaract Club on April - 07 by Rtr. R. Mahinan

126 **COMPUTER DONATION**

கொக்குவில் சி.சி ரி.எம் பாடசாலைக்கு கணனி கையளிக்கப்பட்டது.

Computer Donation C.C.T.M School on April - 09 by Rtr. R. Mahinan



127. **DONATION OF COVER FOR WELL**

கொக்குவில் ராமகிருஸ்ணா மகாவித்தியாலயத்திற்கு கிணற்று மூடி கையளிக்கப்பட்டது.

Donation of cement cover for well at kokuvil Ramakrishna School on April - 09 By Rtr. R. Ramrajah



128 **DONATION OF CLOTHS**

அல்லைப்பிட்டியில இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு உடைகள் வழங்கப்பட்டது.


Donation of Clothings to Allaipiddi Displaced people on April - 26 by Rtr. R. Mahinan



129. **DONATION OF BOOKS**

யாழ்வலய இன்ரறக் கழகங்களுடன் இணைந்து நீர்வேலியை சேர்ந்த காமாட்சி சனசமுக நிலையத்திற்கு ஒரு தொகுதி புத்தகங்கள் கையளிக்கப் பட்டது.

Donation of Books to Kamadchy Communitty Centre in Collaborations with intaract Clubs in Jaffna on April 27 by Rtr. S. Risangi



## 130. DONATION OF SPECTACLES




*12 வறிய மக்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.*

Donation of Spectacles for 12 persons on April 27 by Rtr. R. Mahinan

## 131. DONATION OF GOAT



*வறிய குடும்பத்தின் சுய தொழில் முயற்சியை ஊக்கிவிக்க நல்ல இன ஆட்டுக்குட்டி வழங்கப் பட்டது.*

Donation of Goat to poor family on April - 28 by Rtr. R. Mahinan

## 132.PAMPHLETS ISSUE

*அயடீன் குறைபாடு சம்மந்தமான துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டு பொது சுகாதார உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டது.*

Pamphlets for Iodine dificency People in Chavakacheri on 29. April by Rtr. R. Janani.

**ஏற்கவேண்டிய சில நற்குணங்கள்**

❋ வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாமம் அடுத்தவருக்கு உதவி செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் உதவியை நாம் மறந்து விட வேண்டும். நாம் உதவி செய்வதால் உதவி பெற்றவர் அடிமை என்று எண்ணக் கூடாது.

❋ இளம் பாலகரிடம் மென்மையாக இருக்கவும்.
கஷ்டப்பட்டு முயற்சிப்பவரிடம் இரக்கமாக இருக்கவும்.
தவறு செய்பவர்களிடமும். பலமில்லாதவர்களிடமும் சகித்து இருக்கவும்.
உறுதி செய்து கொள்ளுங்கள். ஏனெனில் வாழ்க்கையில் அவர்கள் மாதிரியே ஒரு சமயத்தில் நாமும் இருந்திருப்போம்.

## அச்சாணி 7 வெளியீட்டின் பின்னர் 2006/2007 செயலாண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்களின் விபரம்

**01. DONATION**

நாவாந்துறை அகதி முகாமிற்கு ஒரு தொகுதி புடவைகள் வழங்கப்பட்டன.

Donation of Clothing to Navanthurai Camp on May 3 by Rtr. T. Vathsala



**02 SAVINGS ACCOUNT OPENING**

சாவகச்சேரி பிரதேசத்தில் வசிக்கும் வறிய மாணவர்களுக்கு வங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு புத்தகங்கள் கையளிக்கப் பட்டன.

Opening Bank Account for Poor Children in Chavakachcheri on may 13, by Rtr. S. Prasheetha



**03 DONATION**

சில்லாலைப் பிரதேச முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

Donation of learning Materials to Pre-School in Sillalai on may 16, by Rtr. Sivathas



**04 TOYS DONATION**

முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் றோட்டறி நிலையத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

Toys Donation to Pre-School at Rotary Center on May 20. by Rtr. Sayanthan



05. **TAKING PART AT DCM IN COLOMBO ON MAY 20, BY RTR. V. LINGESAN**

06 **SOUP PARTY**

கழக உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து கூழ் தயாரித்து அதனை குடித்து மகிழ்ந்தனர்.

Traditional Completion Party at Rotary Center by Rtr. J. Prathepan, Rtr. T.Kabilan and Rtr. R. Mahinan





07 **SEMINAR**

மின் வணிகம். மின்வர்த்தகம் பற்றிய கருத்தரங்கு எமது கழக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

Seminar on e-commerce, and e-business for our club members at Rotary center on Jun 02. Rtr. T. Thavaruban Rtr. J. Pratheepan



08. **DONATION**

உடை, பால்மா போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வறிய குடும்பத்திற்கு வழங்கப்பட்டது.

Donation of Milk powder, Clothes to a poor family at Rotary Center on June 10, by Rtr. T.L. Vannarothaya

09 **SEASON TICKETS ISSUE**

இலவச பேருந்து பருவகால சீட்டுக்கள் வறிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

Issuing free Season tickets for poor School Children Since the month of June by Rtr. A.P. Sinthuya

## 10. NET BALL TOURNAMENT


யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் Net ball போட்டிகள் நடாத்தப்பட்டது.

District Net ball tournament at vembady Girls' high School on June 23. by Rtr. A. Karthika









## 11 IMPROVING GENERAL KNOWLEDGE OF OUR CLUB MEMBERS

உலகின் வெவ்வேறு நாடுகளின்ன கலாச்சாரம், புவியியல் சார்பான தகவல்கள் கழக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

Knowing Cultural and geographical information about America & Canada on June 24, by Rtr. Janani and Rtr. Kasthuri



12. **DONATION**

நாவாந்துறைப் பகுதியில் வசிக்கும் வறிய மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கப் பட்டது.

Final Supports for poor families at Navanthurai Village on Jun 24. by Rtr. T.L. Vannarajah



13 **BOOK DONATION**

காமாட்சி முன்பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கப்பட்டன.

Book Donation for Karmachchi Pre School Children on July 27, by Rtr. IPP. C. Pratheepa



14 **DONATION OF SPORTS ITEMS**

தெல்லிப்பழை நடேஸ்வரா கல்லூரிக்கு ஒரு தொகுதி விளையாட்டுப் பொருட்கள் கொழும்பு Rotaract கழகத்துடன் இணைந்து, கையளிக்கப் பட்டது.

Donation at Sports iterms for Nadaeswara by Rtr. T.L. Vannarajah




15. **DONATION**

வறிய குடும்ப உறுப்பினர்களுக்கு மூக்குக் கண்ணாடி இலவசமாக வழங்கப் பட்டது.

Spectical Donation for three poor family Members at Rotary center on July 30, by Rtr. A.P. Sinthuya.



## 16. INTERVIEW

அதிக வயதுடைய ஆரோக்கியமான முதியவருடனான நேர்காணல் அவரது இல்லத்தில் நடாத்தப்பட்டதுடன் அந் நேர் காணல் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப் பட்டது.


Interview with an old healthy man at on June 28, By Rtr. IPP.C.Pratheeba.





"மரத்தைப் போல
அழகான
கவிதை ஒன்றை
நான்
ஒரு போதும்
கண்டதில்லை"

**– யோய்ஸ் கில்மர்–**



# FROM OUR MIND

காலத்திற்கு என்ன தடை – அது ஓடும்
யார் தடுப்பர்? பல திசைகளில்
நதிகளாய் ஓடிக்கொண்டிருந்த நாம்
கடலாய் இணைந்தோம் – ஒரே குடும்பமானோம்
உறவுகளானோம் – உயிர் பெற்றோம்

முதல் நாள் உள்ளே வரும் போது வெறும் கூட்டுப் பழுக்கள் தான்
ஆனால் இன்று வண்ணங்கள் பெற்று
சிறகுகளையும் பெற்று வண்ணத்துப் பூச்சிகளாய் – பறந்து திரிகின்றோம்
எம் கழகம் தந்த அனுபவ இறக்கையது ஆற்றல் வண்ணம் அது


எதைப் போசவில்லை?
விளையாட்டாகவும். விஞ்ஞானமாகட்டும்
சிந்தையானகட்டும். சினிமாவாகட்டும்
ஆன்மீகமாகட்டும். அறிவியலாகட்டும்
எதற்குமே குழம்பினோம். குழம்பினோம் – விவாதிப்போம்
பின் தெளிந்தோம்.


அவசரம் அவசரமாக பறப்பட்டு வந்து
நிதானமாய் சண்டையிட்டுக் கொண்டிருப்போம்
ஆனாலும் – இடையிடையே ஆடினோம். பாடினோம். மகிழ்ந்தோம்.


நம் உறவுகளின் சந்தோசத்தையும் அறிவோம்
அவர்களின் கண்ணீரையும் அறிவோம்
நம் உதடுகள் இடையிடையேயயய............. இல்லையில்லை
அடிக்கடி சண்டை போட்டாலும்
உள்ளத்தால் என்றும் இணைந்தவர்கள் நாம்
ஒரே குடும்பமாய் எம் கழகத்தாய் மடியில்
இணைந்திருப்போம்
மகிழ்ந்திருப்போம்
துன்பங்களை மறந்திருப்போம்.

# Achchani History



















**Fr. S.M. Sebestian Amathy**
வசந்தகம்

*Fr.* செபஸ்ரியன் அமதி அவர்களை 05.02.2008அன்று பிற்பகல், அவர்களின் அலுவலகம் ஆகிய வசந்தகத்தில் நேர் கண்டேன். அவர் மூலமாக நான் அறிந்து கொண்ட "இளையவர்களின் சமகால பிரச்சனைகள்" தொடர்பான கருத்துக்களை தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

**கேள்வி:** இன்றைய இளம் சமூகம், சமூக நிறுவனங்களில் தம்மை இணைத்துக் கொள்வது, அர்ப்பணத்துடன் சேவையாற்றுவது குறைவடைந்து காணப்படுகிறது. இது தொடர்பான தங்கள் கருத்து.

**பதில்:** இன்றைய இளையோர் சமூக நிறுவனங்களில் தம்மை இணைந்துகொள்வது மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்கத்தக்கதுமே. இவ்விதமான நிறுவனங்களில் அவர்கள் பயிற்சி பெறுவதனால் நல்ல தலைமைத்துவம் உருவாவதற்கு வழிவகுக்கும். இந்த அரிய சந்தர்ப்பத்தை அவர்கள் தங்கள் சுயநல நோக்கங்களுக்காக பயன்படுத்தாது, சமூக முன்னேற்றத்துக்கான அர்ப்பணத்துடன் பங்கேற்பதில்தான் அதன் வெற்றி தங்கியுள்ளது. வெறுமனே அதிகளவான வருமானத்தை. ஊதியத்தை, பயிற்சி பெறுவதை, அனுபவம் அடைவதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல், இவற்றையெல்லாம் கடந்து, பிறரின், சிறப்பாக எமது துன்புறும் மக்களின் நலன்கருதி செயல்படுவது வரவேற்கத்தக்கது.

**கேள்வி:** இன்றைய சின்னத்திரை சினிமாத்தளங்கள் மாணவர் மனங்களை சீரழிப்பதாக பலராலும் முன் வைக்கப்படும் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறதா?

**பதில்:** சின்னத்திரைகள் தான் மாணவர்கள் மனங்களை சீரழிப்பதாகக் கூறப்படுவது முழுமையல்ல, பெரும்பாலும் தொடர் ஊடகங்கள் எமது இளையோரை, மாணவர்களை சீரழிக்கிறது என்ற கருத்து பலராலும் முன்வைக்கப்படுவது தெரிந்ததே. ஆனால், இதற்கு மாற்றீடான நல்ல தொடர்பூட வழிகளை உணர்த்துவதும் நல்ல தெரிவுகளை

தெரியும் மனநிலையை உருவாக்குவதில் பொறுப்புள்ளோர் முயல்வதே சிறந்தது. குறைகள் கூறுவதால் சீர்ப்படுத்தவோ, தடை செய்யவோ முடியாது. நேர்நோக்கோடு நல்ல தெரிவுகளைச் செய்யும் வழிகளை உருவாக்குதலே இதற்கு சிறந்த வழியாகும்.

**கேள்வி:** பாடசாலைப் படிப்பு முடிந்து வெளியேறும் மாணவ சமூகம் பாடசாலையை விட்டு வெளியேறியதும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுப் பற்றிய தங்கள் கருத்து.

**பதில்:** பாடசாலை படிப்பு முடித்து வீடு செல்லும் மாணவர்கள் வன்முறையில் ஈடுபடுகிறார்கள் என்றால் அதற்கு உருவாக்கத்தில் உள்ளவர்களும் காரணமாகலாம் அல்லவா? குடும்பத்தில், குழந்தை–சிறுவர்–இளமைப் பருவ வளர்ச்சிக் காலங்களில் நல்ல ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்ளாத மாணவரை ஆசிரிய சமூகம் இனங்கண்டு, அந்த மாணவர் மட்டில் பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டிய கடமைப்பாடு உண்டு அல்லவா? ஆசரியர்கள்தங்கள் பணியை வெறும் பாடங்களைக் கற்பிக்கின்ற கல்விப் பணியோடு நிறுத்தி விடுவதல்லை.

சமூக நேசிப்பை, கௌரவத்தை மேம்படுத்தும் சிறந்த பயிற்சித் தளமாக பாடசாலைக் கல்வி சீர் பெறவேண்டும். எமது நாட்டுக் கல்விமுறை நடுக்காட்டில் தூர நோக்கற்ற வழகாட்டலாக அமைவதும் காரணமாகும். பாடசாலையில் படிக்கும் போதே ஒழுக்க விழுமியங்கள் விதைக்கும் அமைப்புக்களினால் சிறந்த கௌரவ நிலைகளை உருவாக்கத் தவறுவதும் வன்முறை கலாச்சாரம் வளர காரணங்களாகலாம்.

**கேள்வி:** இன்றைக்கு இளையவர்களுக்கும் சரி பெரியோர்களும் சரி பெரும் பாலானோர் மனித நேயத்தைக் கைக்கொள்ளத் தவறுகிறார்கள். அது தொடர்பான கருத்து,

**பதில்:** “மனித நேயம்” என்பது ஒரு விழுமிய கற்றலாகும். இன்றைய சமூகம் முரண்பாடுகளுடன் வாழும் சமூகம் இன்றைய மனிதன் தன்னை மையப்படுத்திய சுயநல எண்ணத்தில் வாழும் மனிதனாகவே இருப்பதைக் காணக்கிடைக்கின்றது. “மனித நேயம்” முதலில் “தன்னில்” உருவாக வேண்டும். தன்னை மதிப்பவர், தன் மாண்பை பெருமையாக நினைப்பவர், தன்னை ஏற்றுக் கொள்பவர் அன்பு செய்பவரால் தான் மற்றவர்களையும் மதிக்க, ஏற்றுக்கொள்ள. அன்பு செய்ய இயலும். சுயமதிப்பு, சுயமாண்பு அருகிப் போவதால்,மற்றவர்களை மதிப்பது, மற்றவர்களின் மாண்பை பேணுபவது என்பவை எல்லாம் இன்றைய மனிதருக்கு எட்டாக்கனியாகவே இருக்கின்றது.

"மனித நேயம்" என்ன என்று கேட்கும் அளவுக்கு, அது பற்றி பேசுவதில் வல்லவராய் இராது, வாழ்ந்து காட்டுவதில் தான் "மனிதநேயம்" மலர வாய்ப்புண்டு.

**கேள்வி:** வன்முறை கலாச்சாரத்துக்குள் அமிழ்ந்து போய் இருக்கும் எமது சமூகம் தொடர்ந்தும் இவ் வன்முறைகளைப் பார்ப்பதால் ஏற்படும் எதிர்விளைவுகள் யாது (சமூக, உளவியல் பாதிப்பு)

**பதில்:** எமது சமூகம், நீண்ட காலமாக வன்முறைக் கலாச்சாரத்துக்குள் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு சாபக்கேடுதான் இதனால் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற உளசமூக பாதிப்புக்களை நாம் நேரில் கண்டு, அனுபவித்து வருகிறோம். வன்செயல்கள் தான் எம் கலாச்சாரம் என்ற விதமாக வளர்ந்து கொண்டிருப்பதை நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. இவ் வன்செயலாதிக்கத்தால் சமூக சீரழிவுகள், சமூக இடம் பெயர்வுகள், சமூக பழிவாங்கல்கள், சமூக சுரண்டல்கள், ஊழல்கள் போன்ற பாதிப்புக்களோடு, மனிதனும் ஒதுங்கிவாழ, தீமையை – அநீதியைக் கண்டு மௌனம் காக்க பழக்கப்பட்டதோடு தனிமை, பயம், கவலை, இழப்பு, பகை, சூழ்ச்சி, பழிவாங்கல்கள், கோபம், போன்ற உள பாதிப்புக்களுக்கு உள்ளாவதையும் கவனிக்க முடிகிறது. இவ்விதமான சமூக–உள பாதிப்புக்களைக் களைவதற்கு முயற்சிகள் போதாது என்றே கூறலாம்.

**கேள்வி:** இன்றைய இளைய சமுதாயம் உளவியல் தாக்கங்களிற்குட்படாமல் சீரான, சிறப்பான முறையில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** உளத்தாக்கம் இளையோரிடம் மட்டும் எனக் கருதிவிட முடியாது. உயர்வுச்சிக்கல் – தாழ்வுச் சிக்கல்களுடன் உள்ளோர் ஏதோ உள அழுத்தத்துடனே வழிகாட்டுவதும் பாரபட்சம் சந்தேகம் கொண்டு நம்பிக்கையீனத்தை பிறப்பிப்பதும் காரணமாகிறது.

நெருக்கடிக்களுக்கு தீர்வு காண்பதை விட முதலில் நெருக்கடிகளை எதிர் கொள்ளும் மனப்பக்குவமும், கையாளும் உத்திகளில் ஈடுபடுவோரை ஊக்கப்படுத்துதலும், அவரை அவராக ஏற்றுக் கொள்ளும் திறன்வளர்ப்பதில் பொறுப்புள்ளோர் முன் மாதிரிகளாக வேண்டும். குறை கூறுவதை தவிர்த்து, திறமைகளை பாராட்டுவதால் குறைகளை வாய்ப்புண்டு அல்லவா?

**கேள்வி:** நிறுவனம் சார்பாக இளையவர்களை ஆற்றுப்படுத்துவதற்கு கை கொள்ளும் முறைகள் யாவை?

**பதில்:** ஒவ்வொரு வயதினருக்கும் வேறுபட்ட அணுகுமுறைகள் கையாளப்படவேண்டும். மேற்கத்தைய நாடுகளில் நடைமுறைப்படுத்துவதை அப்படியே எமது பிரதேசத்திலும் நடைமுறைப்படுததுதல் தவறான அணுகுமுறையாகும். ஆற்றுப்படுததலில் ஒவ்வொருவரின் கலாச்சாரம் பெரும் பங்கு வகிப்பதை மறந்துவிட முடியாது.

இன்றைய இளையோர் எதிலும் நம்பிக்கையற்றவர்களாகவே காணப்படுகிறார்கள். இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. நிறுவனங்கள் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள ஆர்வம், தூரநோக்கான அறுவடையை அடைவதற்கு காத்திரமான செயல்களை **மேற்**கொள்ளாமையும் காரணம் எனலாம்.

சிறந்த ஆற்றல் திறமைகள் இளையோரிடம் இருந்தாலும் அவற்றைத் தூண்டி துலங்க ஏற்றுக் கொள்ள, பாராட்ட தவறியமையும் ஏமாற்றத்தையே எதிர்கொண்டு வாழ்ந்தவர்கள் பிறரை ஏமாற்றுவதில், ஏமாற்ற நினைப்பதில் உள்ளதவறை தாண்ட நம்பகத்தனம் ஏற்படுத்துவதில் முன் முயற்சிகள் தேவை. பொறுப்புக்களைப் பகிர்ந்து, தலைமைப் பண்பை வளர்க்கும் வழிகளை ஏற்படுத்துவதும், கருத்துக்களைப் பரிமாறும் தளங்களை உருவாக்குவதிலும் புதிய உத்திகள், ஆன்மீக தேடல்கள், குழுநிலை சமூகப்பணிகளில் ஈடுபடவைப்பதும் ஆற்றுப் படுத்தலின் சில வழிகளே.

**கேள்வி:** இது தொடர்ந்து எமது மண்ணில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு யாது?

**பதில்:** அரசசார்பு அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் எதுவாயினும் எமது மண்ணில் பணிபுரியும் சகலரும் அர்ப்பணிப்புடன் கிடைத்த சந்தர்ப்பங்களை பூரணமாக செயல்படுத்த முனைவதும், மக்களின் பங்கேற்பு பணிகளை தூண்டுவதும் அவசியமானவை பிறரில் தங்கி வாழும் மனப்பக்குவத்தைக்களைவதற்கான செயல்களில் ஈடுபடவேண்டும்.

மக்களுக்கான சேவையிலும், தேவையிலும் "நாம் மக்களின் ஊழியர்" என்ற நல்லுறவால் பலவற்றைச் சாதிக்கலாம் என்பதை அனுபவரீதியாக கற்றுக்கொள்ள வேண்டும்.

ஊழியத்தை விட மக்கள் பொருளை சுரண்டும் மையங்களை இனங்கண்டு வெளிப்படுத்தும் உண்மைத்தனம், பொறுப்புக்களை ஏற்கும் மக்கள் பங்கேற்புக்களே சிறந்த நிர்வாக சேவைகளாக வெளிப்படும். அதன் அறுவடைகள் சமூகத்தின் பாராட்டால் உருவாக்கப்படும் சிறந்த தலைமைகள் தான் சான்று பகரும்.

**கேள்வி:** நல்ல மனஎழுச்சிப் பண்புகளை இளையவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு எங்களுடைய கழகத்தின் இன்றைய செயல்பாடுகள் சிறப்பானதாக இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். இது தொடர்பான தங்கள் கருத்து........

**பதில்:** உங்கள் கழகத்தின் செயல்பாடுகள் இளையவர்கள் மத்தியில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு அமைந்திருப்பதும், அவற்றை நினைந்து நீங்கள் திருப்தி கொள்வதும் பாராட்டக் கூடியதே. இப்படியான கழகங்கள், நிறுவனங்கள் பெரும்பாலும் எவ்வளவான திட்டங்களைச் செய்து, எவ்வளவு பணம் செலவழிந்தோம் என்பதில் அதிக கவனம் செலுத்துவதை அவதானிக்க முடிகிறது. இது என்னைப் பொறுத்த வரையில் கவலைக்குரிய அனுபவம். எவ்வளவு பணம் செலவழித்தோம், எவ்வளவு செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தினோமம் என்பதை விட, என்ன பணிகள் நிலைத்து நிற்கின்றன, நீண்டகால பலனைக்கொடுக்கின்றன, மக்கள் பயன்பெறுகின்றனரா போன்ற கருத்துக்களை முன்னுரிமை பெறுவது வரவேற்கத்தக்கது. உங்கள் கழகத்தின் செயற்திட்டங்களால் ஏற்படும் பயன்களின் வெளிப்பாடுகள் தான் சமூக மாற்றத்தால் உங்கள் பணிகளின் அறுவடையாக காணலாம். இந்த சிறப்பான பதிலை மக்கள் தெரிவிப்பதில் தான் உங்கள் செயல்பாடுகளின் வெற்றி தங்கியிருக்கின்றது.

**நேர்கண்டவர்:**
***Rtr. A. Karthika***

**சேவையில் இறைவனைக் காண்போமாக!**

**இன்று சமூகத்திற்கு தேவைப்படுவது சொல் அல்ல செயலே.**

# "மருத்துவ முகாம்" செயற்திட்டம் பற்றிய ஒரு நோக்கு



தொண்டு நிறுவனங்களிலும், சமூக சேவை அமைப்புக் களினதும் செயற் திட்டங்களில் "மருத்துவ முகாம்" முன்னிலையில் நிற்கின்றது. பெரும்பாலும் நகர்ப் புறங்களில் இருந்து நீண்ட தூரத்தில் உள்ள கிராமங்கள் அல்லது குடியேற்றத் திட்டங்கள் இதனால் பெரும் பயன் அடைவது மட்டுமல்லாது திடீரெனப் பரவும் சில நோய்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இது பயனுடையதாகக் காணப்படுகிறது. ஆனால் இவ் "மருத்துவ முகாம்" செயற்திட்டம் பெருமளவு வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை காரணங்கள் சில இங்கே பார்ப்போம்.

## 1) இடம் தெரிவு செய்தல்

பெருமளவு நோய் பெருமளவானோரைத் தாக்கி உள்ள பிரதேசத்தை தெரிவு செய்வதில் கூடிய கவனம் செலுத்துவது நல்லது. ஒரு சில நோயாளரிற்கு பெருமளவு ஆளணியும், மருந்துகளும் கொண்டு சென்று பலமணி நேரத்தை வீணடிப்பது வீண் விரயமே. பிரதேசத்தை தெரிவு செய்யும் போது அப்பகுதியில் எவ்வெவ் வகை நோய்கள் பரவி உள்ளன?.. எத்தனை நோயாளர்கள் எவ்வெவ் நோய்களால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்? போன்ற தகவல்கள் திட்டமிடப்பட்டால் மட்டுமே அதற்குரிய ஆயத்தங்களுடன் செல்லலாம். இருமல் நோயாளிக்கு தடிமன் மருந்துடன் போய் பயனில்லை.

## 2) நோய்க்கான காரணம்

தெரிவு செய்யப்பட்ட பிரசேத்தில் பரப்பி உள்ள நோய் எவ்வாறு வந்தது என்று அறியும் போது அதனை மேலும் பரவாது தடுக்க முடியும். இதுவே மருத்துவ முகாமின் பிரதான வெற்றி அது பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தக் கூடிய விளக்கங்களும், கலந்துரையாடல்கள் மூலமாக ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும். இதற்கு தயார்படுத்தப்பட்ட குழு ஒன்றையும் ஆயத்தம் செய்தல் வேண்டும் இது பற்றி நோயாளர்களுக்கு விளங்கப்படுத்துவதற்கு விவரணப்படங்களும் (நிழற்படம், ஒளிநாடா / ஒலிநாடா, இறுவட்டு குறும்நாடகங்களும்) பயன்படுத்தலாம். மருந்து வழங்குவது மட்டும் அல்ல மருத்துவமுகாமின் நோக்கு என்பதை விளங்குதல் வேண்டும்.

## 3) சுத்தம் பற்றிய விளக்கம்

பெரும்பாலான பின்தங்கிய கிராமங்களில் "சுத்தம்" / "சுகாதாரம்" கேள்விக் குறியாகவே காணப்படும். எனவே சுகாதாரப் பழக்க வழக்கங்கள் பற்றிய கருத்துக்களையும் விளக்கங்களையும், சுகாதாரச் சீர்கேட்டால் பரவக் கூடிய நோய்கள் பற்றியும் கூறலாம்.

## 4) குறைபாட்டு நோய்

சிலபிரதேசங்களில் "போசாக்கின்மை" காரணமாக பெருமளவு நோயாளர்கள் காணப்படுவர். இவர்களுக்கு மருந்து வழங்குவதிலும் பார்க்க, அவர்களுக்க வேண்டிய சத்துணவுகளை வழங்கலாம். குறைபாட்டு நோய்கள் பற்றியும், அவற்றின் தாக்கம் பற்றியும், எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது பற்றிய கருத்துக்களை விளக்கலாம்.

## 5) நோயாளர் பராமரிப்பு

நோயாளர்களை எவ்வாறு பராமரிப்பது? என்பது பலரிற்கு தெரியாத விடயம் இது பற்றிய விளக்கங்களை நோயாளர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு விளங்கப் படுத்தலாம். முதலுதவிப் பயிற்சிகளையும் அது பற்றிய பயன்களையும் கூறலாம்.

## 6) மருந்துகள் பற்றிய விளக்கம்

மருந்துகள் வழங்கப்படும் போது அவை பற்றிய பூரண விளக்கம் வழங்கப்பட வேண்டும். பாவனை முறை, பக்கவிளைவுகள், போன்றவற்றையும் அறிவித்தல் வேண்டும். சில இனிப்புச்சுவை உடைய பாணி மருந்துகளை சிறு பிள்ளைகள் விரும்பி அருந்துவதால் அதிகம் எடுத்து விடுவார்கள். எனவே சிறுவர்களின் கைகளுக்கு எட்டாதபடி வைப்பதற்கும், வெளிப்பூச்சு மருந்துகளை தவறுதலாக உள்ளெடுக்காத வாறும் விளக்கமளிக்க வேண்டும்.

## மருத்துவ முகாம் குழுவின் அங்கத்தவர்கள்

1) வைத்தியர் – நோய்களின் தன்மைக்கு ஏற்ப அவ்வத் துறைசார் மருத்துவர்கள்
2) மருந்தாளர் – மருந்துகள் பற்றிய விளக்கக் குறிப்புகள் வழங்குதல்
3) மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்– மருத்துவ ஆய்வுகள் மேற் கொள்ளல்
4) பொதுசுகாதார உத்தியோகத்தர் – சுத்தம் / சுகாதாரம் பற்றிய கருத்துக்களை வழங்கல்
5) மருத்துவ மாது

6) கண் சிகிச்சையாளர்

7) பற்சிகிச்சையாளர்

8) இயன் மருத்துவர்

மற்றும் வேண்டியவர்கள்

சமூக சேவை அமைப்பு / கழகத்தின் உறுப்பினர்களுடன் மேற்படி கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டு, ஓர் குழு உள்ளடக்கப்பட்டாலே மருத்துவ முகாம் பூரண வெற்றியடையும் கிடைத்த பணத்திற்கு, செயற்திட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டால் "மருத்துவ முகாம்" மக்கள் மத்தியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் "மருத்துவ முகாம்" குழுவில் தகுதிவாய்ந்த அங்கத்தவர் எவரேனும் இல்லாமல் இருப்பின் அதன் விளைவுகள் சாதாரண மக்களையே நோயாளியாக்கும் சில தனியார் நிறுவனங்களில் தொழில்புரிகின்ற, பூரண பயிற்சி பெறாத(போலி) நபர்களை மேற்படி குழுவில் இணைத்து செயற்பட்ட மருத்துவ முகாம்களால் மக்கள் ஆபத்துக்கள் சிக்கி வருவது வேதனைக்குரியதே!

*L.Thushikaran*
*Medical Laboratory Technologist*
*SLMC. Regd.No:0418*

வேண்டாம்
புகைப்பிடிப்பதை
பொசுக்கிவிடு

கைகழுவினாலும்
போகாதிருக்க
அது ஒன்றும் கைரேகையன்று

சிகரெட் பெட்டிகள்
சின்னச் சின்ன சவப்பெட்டிகள்
மரணம் அவற்றுள்
உறங்கி வசிக்கிறது.
ஒவ்வொருமுறை உறிஞ்சும் போதும்
சிகரெட்டின் மூக்கு
சிவக்கிறதே
அபாய அறிவிப்பு அல்லவா அது?

உனக்கு நீயே
கொஞ்சங் கொஞ்சமாய் ஏன்
கொள்ளி வைத்துக் கொள்கிறாய்?

சிகரெட் பெட்டியின் உள்ளட்டை
வெள்ளையில் இருப்பது
மரண ஓலையை அச்சிடத்தானோ?

-கவிஞர் வைரமுத்து-



# வாழ்க்கை

"எனக்காக வாழ்கிறேன்" என்ற எண்ணம் போய் "மற்றவர்களுக்காக நான் வாழ்கிறேன்! என்ற எண்ணம் எவனிடத்தில் உதயமாகிறதோ அவனுடைய வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை. வாழ்க்கை என்றால் என்ன? குடிக்க வேண்டிய நீர் ஊற்று, ஏற வேண்டிய மலை, எரிய வேண்டிய கர்ப்பூரம், மரம், நிழல் கொடுத்தால் மட்டும் போதாது பலனையும் கொடுக்க வேண்டும். அதைப் போல் நூலறிவும் செல்வச் சிறப்புடையது மட்டும் வாழ்க்கையாகாது பிறருக்கு பயனுடையதாய் இருப்பது தான் வாழ்க்கை.

வாழ்க்கையானது மல்லிகைப் பூ பரப்பிய படுக்கையல்ல, சிமெண்ட் போட்ட பாதையல்ல, உண்டு உறங்குவதற்கான சத்திரவாசலல்ல. அது ஒழுக்க நெருப்பு, சேவைப் பம்பரம், ஒழுங்குக்கத்தி

வாழ்க்கையில் ஓய்வு வேண்டுமென்று விரும்பிறவன் நோயாளி, சந்தர்ப்பம் கிடைக்க வில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கிறவன் சோம்பேறி, தோல்வியினால் சோர்வடைகிறவன் கோழை, பிறர் சொல்லுக்கு பயந்து, தன் செயலை மறந்து விடுகிறவன் இருந்தும் இறந்தவன்.

சதா சலித்துக் கொண்டிருப்பது எதுவோ அதுதான் வாழ்க்கை. அந்தச் சலனத்திலிருந்து சிந்தனைப் பொறி கிளம்ப வேண்டும். செயல்கள் உருவாக வேண்டும் சிந்தனை செய்யாத மனமும் செயலாறறாத வாழ்வும், சவக்குழியிலே சரண்புகுவதற்குத் தகுதியுடையவை.

வாழ்க்கையிலே ஒரு இலட்சியம் வேண்டும். "என்னிடத்தில் என்ன சக்திகள் இருக்கின்றன" என்ற கேள்வியை எவனொருவன் தனக்குதானே கேட்டுக் கொள்கிறானோ அவனுக்கு இலட்சியம் தானாகப் புலப்பட்டுவிடும், அவனுடைய அன்றாட வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படும். தன் சக்திகளை உணராத வரையில் தான் மனிதனுக்கு ஆபத்து, உணர்ந்து கொண்டுவிட்ட பிறகு அவைகளை உபயோகித்து அதிகமான பேருக்கு அதிகமான நன்மை உண்டாகுமென்று பார்க்க வேண்டும். ஒரு இலட்சியவாதியின் இலட்சணமே இதுதான்.

அதிகமான பேருக்கு அதிகமான நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் உண்டாகின்ற

ஒருவனுக்குக் கூடவே பல சங்கடங்கள் தொடர்கின்றன. அவன் பல சோதனைகளுக்கு ஆளாகின்றான். அவைகளிலிருந்து அவன் மீண்டுவந்தால் மட்டும் போதாது, அவனது இலட்சியப் பார்வை மாறாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறவனாவான்.

வாழ்க்கையில் இரண்டு சங்கடங்கள் அன்பும், அஞ்சாமையும். அச்சாணியாயிருப்பது பற்றின்மை. பற்றின்மை என்பது செயலின் பலனின் பற்று இருக்க கூடாதென்பது ஓர் அர்த்தம் எந்தவொரு காரியத்தையும் மனம் வைத்துச் செய்ய வேண்டும், பற்றுவைத்துச் செய்ய வேண்டும். ஆனால் அது என்ன பலனைக் கொடுக்கப் போகிறதென்று எதிர்பார்த்து கொண்டிருக்கக் கூடாது. இது கடினமான சாதனைதான். ஆனால் இதுதான் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு மார்க்கம்.

பற்றின்மை என்பதற்கு உடைமை உணர்ச்சி இல்லாமை என்பது மற்றோர் அர்த்தம். உடைமை இல்லாமல், அதாவது நிலம், வீடு, வாசல் துணிமணி முதலியன இல்லாமல் வாழ்க்கை நடத்த முடியாது. ஆனால் அவை எனக்காக மட்டும் பிரயோசனப்பட வேண்டும். அவைகளுக்கு நானே உரித்துடையவன் என்ற எண்ணம் போக வேண்டும். இந்த எண்ணம் போன இடத்தில் தான் அன்பு, அஞ்சாமை, தியாகம் முதலிய பயிர்கள் செழப்பாக உண்டாகும். இந்தப் பயிர்கள் நிறைந்தது தான் வாழ்க்கை. இதை நடத்துகிறவன் தான் மனிதன்.

மேலும் வாழ்க்கை பற்றிய சில அறிஞர்களின் கருத்துக்களை நோக்குவோம்.

நான் பெயரற்றவன்....
கொள்கைகளின் கட்டுப்படாதவன்
கீழான நம்பிக்கைகளால் சீரழிக்கப்படாதவன்
சமயக் கட்டுப்பாட்டிற்குள் சிறைபிடிக்கப்படாதவன்
சமய குருமாரைப் பணிந்து துயரமடையாதவன்

> 'மனதைத்திடப்படுத்திக் கொண்ட ஒருவனுக்கு
> உலகில் கடினமானது ஒன்றுமேயில்லை'

சமயதத்துவப் பொறியில் சிக்காதவன்
மாறுபட்ட மதப்பிரிவுகளின் மாஆற்றல்
மிகு ஆதிக்கத்தில் அகப்படாதவன்
உயர்வு தாழ்வு அற்றவன்
தொழுவேனும் தொழப்படுவோனும் யானே
யான் சுதந்திரமானவன்
விரி கடலை நாடிச் செல்லும்
அழகிய ஆற்றின்கீதமே என் கானமாகும்
பல இடங்களிலும் தடையற்று
அலைந்து அலைந்து திரியும்
யானே "வாழ்க்கை"

– ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

**மனித வாழ்வு**

இந்த உலகில் பிறக்கும் போது மனிதன் தன் இஷ்டம் போல் பிறப்பதில்லை. இதைவிட்டுப் போகும் போதும் தன் விருப்பப்படி அவன் போய் விடுவதில்லை. கஷ்டப்படும் போது அவனுக்கு யாரும் கடன் கொடுக்க தயாராக இருப்பதில்லை. செல்வச் சீமானாகி விட்டாலோ கடன் கேட்கும் ஆசாமிகளுக்கோ பஞ்சமில்லை.

- ஏழையாக இருந்தால் அப்பாவி என்றும் இகழப்படுகின்றான். பணக்காரனாகி விட்டாலோ அயோக்கியன் என்று தூற்றப்படுகிறான்.
- தருமம் செய்தால் டம்பம் என்கிறார்கள். செய்யாவிட்டால் கஞ்சன் என்ற வெறுக்கிறார்கள்.
- ஆசாரசீலனாக இருந்தால் கபடன் என்கிறார்கள் அப்படி இல்லாவிட்டால் பஞ்சமா பாதகன் என்கிறார்கள்.
- எல்லாரையும் நேசித்தால் மகாகோழை என்கிறார்கள். யாரையும் மதிக்காவிட்டால் திமிர் பிடித்தவன் என்று ஏசுகிறார்கள்.

> 'நாம் அடக்கத்துடனும் விவேகத்துடனும் இருந்து. இறுமாப்பு, அவசர புத்தி இரண்டும் இல்லாது, மக்களுக்கு முழுமனதுடன் அவர்களின் நலன்களிலிருந்து சேவை செய்ய வேண்டும்.

✐ பணம் சேர்த்தால் லோபி என்றும் செலவழித்தால் ஊதாரி என்றும் பெயர் பெறுகிறான்.

✐ கஷ்டப்பட்டு உழைத்தால் வெறும் யந்திரம் என்பார்கள், உழைக்காமல் இருந்தால் உதவாக்கரை என்று திட்டுகிறார்கள்

பாவம் அவன் பிறந்து என்ன பயன்?

**—ஆபிரகாம் லிங்கம்—**

## வாழ்வு

எங்கே மனம் அச்சமற்றிருக்கிறதோ
தலை நிமிர்ந்திருக்கிறதோ
எங்கே அறிவு உரிமையுடனிருக்கிறதோ
எங்கே உலகம் குறுகிய குடும்ப எல்லைகளால்
துண்டு துண்டாகப் பிளவுபடாதிருக்கிறதோ
எங்கே உலகம் குறுகிய குடும்ப எல்லைகளால்
துண்டு துண்டாகப்பிளவுபடாதிருக்கிறதோ
எங்கே உண்மையின் ஆழ்ந்த அடிப்படையிலிருந்து
சொற்கள் பிறக்கின்றனவோ
எங்கே சலியாத உழைப்பு விழுமிய நிலையை
நோக்கி நீளுகிறதோ
எங்கே பகுத்தறிவு என்னும் தெளிந்த ஓடை
மூடப்பழக்க வழக்கம் என்னும் வறண்ட பாலையில்
சுவறிப் போகாதிருக்கிறதோ
எங்கே என்றும் விரிந்து நோக்கும் எண்ணத்திலும்
செயலிலும் மனத்தை முன்னின்று அழைத்துச் செல்கிறதோ
அங்கே
அந்த உண்மையுள்ள இன்ப உலகத்தில்
என் நாடு விழிப்புறுக.

**—இரவீந்திரநாத் தாகூர்—**

'வாழ்க்கையில் இன்பமாய் இருப்பதற்குரிய நேரம் இப்போது தான்!
இன்பமாய் இருப்பதற்குரிய வழி
மற்றவர்களை அதுபோல் இன்பமாயிருக்கச் செய்வதுதான்.!

"பணம் தேடுவதுதான் வாழ்க்கையின் முடிவா? இல்லை
துன்பங்களுக்கு மாற்றம் காண்பதுதான் வாழ்க்கை – மான்டெயின்–

"மனித வாழ்க்கை ஒரு யாத்திரை – பிளேட்டோ–

அறிஞனாயிருக்கின்ற ஒருவன் தானே வலிய முன்னுக்கு வந்து நிற்பதில்லை தன்னைப்பெரிய மனிதனாக்கிக் கொள்வதுமில்லை. அவன் யாரோடும் சண்டை போடுவதுமில்லை. அதனால் அவனோடு யாரும் சண்டை போடுவதும் இல்லை. அனேக பொருள்கள் வளர்வதற்கு அவன் உதவியாயிருக்கிறான், ஆனால் அவைகள் விஷயத்தில் அவன் தலையிடுவதில்லை. அவனுக்கென்று சொந்தமான இருதயமில்லை, ஆனால் நூற்றுக் கணக்கான குடும்பங்களின் இருதயம் அவனுடைய தாயிருக்கிறது. அதாவது அவன், தனக்கென்று வாழ்வதில்லை, பிறருக்காக வாழ்கிறான். அவன் நன்மையை நன்மையினால் சந்திக்கிறான், தீமையையும் நன்மையினால் சந்திக்கிறான். எல்லாரிடத்தும் அவன் பணிவாகின்றான். இதனால் உலகமெல்லாம் அவனையே நாடுகிறது.

குடும்பத்தை விட்டு ஓடிப்போய் உலகத்திற்கு தொண்டு செய்பவர்களுடைய தொண்டில் இனிமை இராது. குடும்பத்திலிருந்து தேசம், தேசத்திலிருந்து மானிட சமுதாயம், இவை ஒன்றுக்காக மற்றொன்றைத் துறந்து விடக் கூடாது. ஒன்றிலே மற்றொன்றைக் காண்பதில் தான் மனிதன் வளர்ச்சியடைகிறான், அவனுடைய வாழ்க்கை நிறைவடைகிறது.

"எனக்காக வாழ்கிறேன்" என்ற எண்ணம் போய் "மற்றவர்களுக்காக நான் வாழ்கிறேன்" என்ற எண்ணம் வெளிடத்தில் உதயமாகிறதோ அவனுடைய வாழ்க்கைதான் உண்மையாக வாழ்க்கை. மற்றவர்களுடையதெல்லாம் வெறும் சக்கையென்று வாழ்க்கைக்குச் சுருக்கமாக விளக்கம் கூறலாம்.

உங்கள் வாழ்க்கை
உங்கள் கையிலேயே உள்ளது
உங்கள் கைக்கும் வானம் வசப்படும்
வாழ்க்கை வாழ்வதற்கே.

*By Rtr. S. Rashan*

'தவறுகள் இழைத்தால் அவற்றைத்திருத்து, இழைக்காவிட்டால் அவற்றுக்கெதிராக எச்சரிக்கையாயிரு'

# நானும் நாடும்

**அ**றிந்தவர் எல்லாம்
அண்டைநாடு போய்விட்டார்
இப்போ
அக்கம் பக்கம் புதுமுகங்கள்
அறிந்து கொள்ளும் ஆவலில்
அடியெடுத்து வைத்தேன் வாசலில்
அம்மா சொன்னாள்
அகப்பட்டதோ வீண் பிரச்சனைகள்

**வி**ழுந்தடித்து போனேன்
விடிய வகுப்பிற்கு
வழியில் மறித்தனர்
வகுப்பிற்கா போறது?
வரிசையாய் கேள்விகள்
வம்பளத்து முடிய அங்கே
வகுப்பும் முடிந்தது.

**வ**குப்பு முடிய கொஞ்சம் தாமதம்
வலு பசியோடு வீடு பயணம்
வரும் வழியில் மக்கள்
வீதியில் வழிமறித்து நின்றனர்
என்ன என்று கேட்டேன்
எரிச்சலுடன் ஒருபதில்
இன்னும் ஒரு மணிநேரம் எடுக்கும்
இந்த பாதை திறக்க என்று

**இ**டையில் அவசர வேலை
இரவு கொஞ்சம் தாமதம்
இரைந்து கொண்டிருந்தாள் அம்மா
இப்ப இருக்கிற பிரச்சனையில
இனி திரியாத றோட்டில
இப்படி என்றா
இனிமே இரு வீட்டில

**க**ன காலத்திற்கு பிறகு
கண்ட நண்பர்களுடன்
கதைத்துக் கொண்டிருந்தேன்
சத்தம் சாடையாய் கூடியதும்
சட்டென்று அம்மா வந்து
சன்னமாய் சொன்னாள்
கத்தாதீர்கள் தம்பிமார்
கதவுக்கும் இப்போ காதிருக்கு
காணாமற் போய்விடுவீர்கள்
அப்புறம் என்று!

**கை**த்தொலைபேசியில் அடிக்கடி
*Coverage* காணாமற் போய்விடுகிறது
காரணம் கேட்டால்
காரணமின்றிய அழைப்புக்களாம்
கையாலாகாதவர்களின்
கச்சிதமான பதில் இது!.

*CDMA*க்கு பதிந்து
சீரழிந்து போயினர் பலர்
சீக்கிரமாய் வரும் என்றனர்
சிறிது காலம் சென்று கேட்டால்
சிலருக்கு அனுமதி "அவர்களிடமிருந்து"
கிடைக்கவில்லையாம்.
சீ.......... என்று விட்டது எல்லோருக்கும்!

*By Rtr. T. Geethalatha*

# மதமும் மனிதனும்

**நான் எப்போதும் மதங்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுப்பதற்கு தயாராகவே உள்ளேன். அதனால் தன்னுடைய ஆழமில்லாத அறிவுத்தன்மைக்கு எனது அறிவாற்றலை அடகு வைப்பதற்கு ஒன்றும் தயாராக இல்லை**

"ஷெல்லி ஒரு நாத்திகன், ஒரு ஜனநாயக வாதி, ஒரு மனிதன்" ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி நெப்பிள்ஸ் நகரில் உள்ள நூலகம் ஒன்றுக்குச் சென்ற போது அங்குள்ள பெயர்ப் பதிவேட்டில் இவ்வாறு தன்னைப்பற்றி பதிந்து கொண்டார். அவர் எழுதியது சரியானதாகவே எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் ஒரு நாத்திகனால் மட்டுமே முழுமையான ஜனநாயக வாதியாக இருக்க முடியும். ஏனெனில் ஒரு மதவாதிக்கு தனது வாழ்க்கையை வாழ்தல் பற்றி அவனது மதம் கூறியதைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. நாத்திகர்களை மதவாதிகள் தீயவர்களை, தீண்டத் தகாதவர்களை நோக்குவது போல் நோக்குகின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் மதவாதிகளை விட மனதளவிலும் சரி உடலளவிலும் சரி தூய்மையாளவர்கள். இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ, பௌத்த மத போதகர்களை ஒரு கூட்டணி அமைத்து ஒரே மேடையில் வைத்து நாத்திகர்களைப் பற்றி பேசச் சொன்னால் அவர்கள் "நாத்தினர்கள் – மதவிரோதிகள், அவிசுவாசிகள், அவர்களைப் புறக்கணியுங்கள்" என்று ஒரே குரலில் ஊளையிடுவார்கள். ஆனால் தீடீரென்று ஒருவர் எழுந்து நீங்கள் சொல்வது சரிதான் ஆனால் நான் எந்த மதத்தைப் பின்பற்றுவது?" என்று கேட்டு விட்டால் போதும் என்ன நிகழும் தெரியுமா? விபூதிக்கும் – மெழுகுவர்த்திக்கும் இடையில், சிலுவைக்கும் – பூணூலுக்கும் இடையில், தொப்பிக்கும் – துளசி மணிக்கும் இடையில், மொட்டைத் தலைக்கும் – முழுத்தாடிக்கும் இடையில் ஒரு வாய்த்தர்க்கம் தோன்றும் சில வேளைகளில் எல்லாம் வல்ல இறைவனைக் காக்கும் பொருட்டு வெட்டுக் குத்தில் முடிந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

ஆதிகால மனிதன் காட்டுக்குள் வாழ்ந்த ஒரு காட்டாளனாக விளங்கினான். இயற்கையின் முன்னால் ஒன்றுமே செய்ய முடியாத கையாலாகதவனாக, ஆதரவற்றவனாக, பயத்தோடு வாழ்ந்து வந்தான். இந்த பலவீனமும் நிராதரவும் தான் மதநம்பிக்கையின் அடிப்படைகளாயின. அவனது அறியாமையும் பலவீனமும் மத நம்பிக்கையின் பெற்றோர் களாயின. காலப்போக்கில் சமுதாயம்

வர்க்கங்களாக பிரிவுபட்ட போது அடக்கு முறையின் வேகம் அதிகரிக்க மத நம்பிக்கைக்கு புதியதோர் தேவை ஏற்பட்டது. ஆளும் வர்க்கத்தின் உதையும், மிதியும் பட்டு நரக வேதனைப்பட்ட, அடிமைப்பட்ட வர்க்கத்தின் நிராதவு உணர்ச்சிக்கு ஒரு ஊன்று கோல் தேவைப்பட்டது. பொது மக்களுக்கு ஏற்பட்ட மேற்படி நிராதரவுக்கு தித்திப்பு ஊட்டவே மதநம்பிக்கைகள் பயன் படுத்தப்பட்டன. இன்று மதம் மூட நம்பிக்கைகள், மந்திர தந்திரவாதங்கள், தலைவிதி, ஊழ்வினைக் கருத்துக்கள் இவற்றோடு வகுப்புவாத விஷயங்களை மக்களிடம் புகுத்தவும், ஆளும் வர்க்கத்தின் கையில் பொது மக்களை சுரண்டுவதற்கும், ஆத்மீக ரீதியாக அடிமைப்படுத்தவும் ஓராயுத மாக விளங்குகின்றது.

உலக சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் எத்தனை எத்தனை மதச்சண்டைகள்........? கிறிஸ்தவனுக்கும்– முஸ்லீமுக்கும், இந்து வுக்கும் – கிறிஸ்தவனுக்கும் இந்து வுக்கும்– முஸ்லீமுக்கும், ஷுன்னிக்கும் ஷியாவுக்கும், கிறிஸ்தவனுக்கும் – புரட்டஸ் தானுக்கும், சிவனைப் பின்பற்றுபவனுக்கும் விஸ்ணுவைப் பின்பற்றுபவனுக்கும் இடையில் இவ்வாறு எத்தனை எத்தனை சண்டைகள்? கடவுளைக் காப்பாற்றும் பொருட்டு எத்தனை எத்தனை கொலைகள், கொள்ளைகள், வெட்டுக்கள், குத்துக்குள், கழுவேற்றங்கள், நெருப்பிலிட்டு பொசுக்குதல், சித்திர வதைகள், யுத்தங்கள் ....? இவ்வாறு கடவுளைக் காப்பாற்ற மதபக்தர்கள் போராடிப் பெருக்கிய இரத்த ஆறுகளை நினைத்தால் உலக மகாயுத்தங்கள் கூட வெட்கித் தலைகுனியும். இவ்வாறு மனித இரத்தம் ஆறாக ஓடுவதை விரும்பாத எவனும் மத நம்பிக்கைக்கு எதிரியே.

